முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்

**O.S No.823/2024**

**Witness PW2**

பெயர்: செல்வம்

த/பெ.: மாணிக்கம்

இன்று (26/03/2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை

வாதி நடராஜன் அழைத்தன் பேரில் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். வாதி நடராஜ் ஊரில் அடகு கடை வைத்துள்ளார் என்றால் சரிதான். வாதி நடராஜ் ஊரில் கடன் கொடுத்து பிராமிசரி நோட்டு எழுதி வாங்கி கொள்வார் என்றால் சரிதான். வாதியும், பிரதிவாதியும் நெருக்கமான நண்பர்கள் என்றால் நண்பர்கள். வாதிக்கும், பிரதிவாதிக்கும் இடையே இதற்கு முன்பும் பணம் கொடுக்கல் வாங்கல் இருந்தது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. நான் சாட்சி கையொப்பம் செய்யும் போது பிரதிவாதி அந்த இடத்தில் இருந்தார். நான் கையொப்பம் போட்ட அன்று வாதி பிரதிவாதியிடம் ரூ.92,000/- கொடுத்த விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் பாண்டில் கையொப்பம் போட்டு 12 வருடம் ஆகிறதா என்றால் 8 வருடம் இருக்கும். நான் கையொப்பம் செய்த பாண்டில் பிரதிவாதி ஒரு கையொப்பம் செய்திருந்தார். நான் கையொப்பம் செய்த பாண்டு அச்சு பாண்டு. நான் கையொப்பம் செய்த போது அந்த அச்சு பாண்டு அனைத்தும் நிரப்பப்பட்டிருந்தது என்றால் சரிதான். வாதிக்கும் எனக்கும் ஒரே ஊர் என்பதால் அவர் எனக்கு பழக்கமானவர் தான். நான் அவசரத்திற்கு வாதியிடம் பணம் வாங்கி திருப்பி கொடுத்தது உண்டு என்றால் அவ்வாறு கிடையாது. என் முன்பு வைத்து பாண்டு பிரதிவாதியால் எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. பாண்டு என் முன்பு வைத்து பிரதிவாதிக்கு படித்து காட்டப்படவில்லை என்றாலும், வாதி எனக்கு பழக்கமானவர் என்பதால் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான்

**குறிப்பிடும் மற்றும் சாட்சியம் அளிக்கும் பிராமிசரி நோட்டு தாவா பிராமிசரி நோட்டு கிடையாது என்றாலும் சரியல்ல.**

**(Sd/- C.R.Gowthaman),**
**Principal Subordinate Judge,**
**Villupuram.**